2016 பிப்ரவரி 20]

5. அறிக்கைகள் அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலத்தின் அத்தனை ஜீவன்களும் உச்சரிக்கும் சொல் அம்மா, அம்மா, அம்மா. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் வேதச் சொல் அம்மா, அம்மா, அம்மா. 8 கோடி தமிழர்களின் வாழ்வை வளம்பெறச் செய்த சொல் அம்மா, அம்மா, அம்மா. சீர்மிகு சிந்தனையால், பேரறிவு ஆற்றலால் துறைதோறும், துறைதோறும் ஐந்து தலைமுறைகளானாலும் காண முடியாத வளர்ச்சியை, ஐந்தே ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சியை உயரச் செய்த எங்கள் உயிரே, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கை இடர்பாடான வறட்சியானாலும் தமிழகம் வாடாமல், இயற்கை இடர்பாடுகளான மழை, வெள்ளமானாலும் மக்களைக் காத்திடும் மாதரசி, எங்கள் அம்மா. இயற்கைப் பேரிடர்களால் வளர்ந்த நாடுகள் நிலை குலைந்தாலும் தமிழகத்தின் வளர்ச்சியை நிலைபெறச் செய்தவர் அம்மா. தொற்றுநோய்களே தொட முடியாமல் மாநிலத்தின் துயர் துடைத்து காத்திட்ட காவல் தெய்வம், எங்கள் அம்மா. என்றென்றும் நாங்கள் போற்றிடும், வணங்கிடும் அம்மா. வருகின்ற 24 ஆம் தேதி அம்மா அவர்களின் 69-வது பிறந்த நாள். அகிலம் சிறந்திடும் நன்னாள். வீடு தோறும் விழா எடுப்போம், வீதி எங்கும் கொண்டாடுவோம். இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா, உலகில் தமிழ் மொழி உள்ள வரை ஆள வேண்டும் ஆள வேண்டும், வாழ்க! வாழ்க! வாழ்க என மகிழ்ந்து பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 12-20

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 23-வது மற்றும் 24-வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி, வணக்கம்.